# முல்லை நில மக்கள் பண்பாட்டில் கோல்

***முனைவர் ந. ரேவதி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383204

***ஆய்வுச்சுருக்கம்***

*முல்லை நிலத்து மக்களின் வாழ்வியலில் முக்கியமானதாக இரண்டைக் கூறுலாம். ஒன்று அவர்களுடைய தொழில் ஆநிரைகளை மேய்த்தல், இரண்டு ஏறுதழுவுதல். இவ்விரண்டுமே ஆநிரைகளை மையமிட்டதாகவே காணப்படுகின்றன. பசுக்களை மேய்ப்பதற்கு உதவும் கருவியாக விளங்கிய கோல், மக்களினத்தின் தலைவனுடைய ஆட்சிக்குக் குறியீடாக அமைந்து அவன் ஏந்திய கோல் அவனுடைய குடிமக்கள் வணங்கும் கோலாக நின்றது. ஏறுதழுவுதல் என்னும் முறை களவுமணமுறையைக் கற்புமணமுறையாக மாற்றி பெண்களுக்கான விதிமுறைகளை வரையறை செய்வதற்கும், கட்டுப்பாடுகளை விதிப்பதற்கும் வழிவகுத்துக் கொடுத்துள்ளது.*

*காடும் புறவும் முல்லைத்திணையாகும். முல்லைநில மக்கள் எருமை, பசு, ஆடு போன்ற விலங்குகளைப் பழக்கி வளர்க்கக் கற்றுக் கொண்டனர். மனித இனம் நாகரிக வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த நிலையில், திரும்பிப் பார்க்க வைத்த வளர்ச்சியாக முல்லை ஆயரின் நாகரிகம் இருந்தது. அக்காலத்தில் அந்தத் தலைவனுக்குச் செல்வமாக விளங்கியவை மாடுகளே. மாடு என்றால் செல்வம் என்னும் வழக்கு திருவள்ளுவர் காலம் வரை இருந்துள்ளது.*

***“கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு***
***மாடு அல்ல மற்றவை யவை” (திருக்குறள்.400)***

## முல்லைநிலமும் மக்களும்

*இயற்கை வழிபாடு என்பது சங்க காலம் தொட்டே வழக்கில் இருந்து வருவனவே. முல்லை நிலத்தில் வழங்கப்படும் மால் என்ற சொல்லிற்கு கரியநிறம் என்று பொருள். அது காடுகளைக் குறித்ததாகும். பசுமைகாடு இரவில் பயம் தருவதாகவும், பகலில் வியப்புட்டுவதாகவும் இருந்ததால் அக்காடு (மால்) வழிபாட்டிற்குரியதானது.*

*“ஏழடுக்கு மாளிகைகளில் முல்லைநில மக்கள் குடியிருந்தனர். பாசறையில் வாளை இடையில் கட்டிய பெண்கள் இருந்துள்ளனர். நாழிகைக் கணக்கர் நாழிகைவட்டில் கொண்டு காலத்தைக் கணித்தனர். அரசு குறித்த செய்திகளைப் பிறர் அறியாதிருக்க மிலேச்சர்களைப் பணியமர்த்தினர்” என முல்லைப்பாட்டு (65 - 66) மொழிகின்றது.*

*மடலேறுதல் என்னும் பழக்கம் மற்ற திணைகளில் வழக்கமாகிக் கொண்டிருக்க, முல்லைத்திணையில் மட்டும் ஏறுதழுவி மணமுடித்தல் என்னும் நிகழ்வு சிறப்படைந்து கொண்டிருந்தது. ஏறுதழுவுதல் வீரத்தின் அடையாளம் மற்றுமன்று பெற்றோர் பேசி முடிக்கும் திருமணத்திற்கான முன்முயற்சியாகவும் காணப்படுகிறது. வேட்டைகளிலும், போர்களிலும், ஆநிரை மேய்த்தலிலும் விலங்குகளை அடக்கும் பயிற்சியாகவும் அது கருதப்பட்டுள்ளது. ஆயர்கள் உயிரினங்களைப் பாதுகாக்கும் தொழிலுடையவர் ஆதலாலே அவற்றிற்கு நரி, புலி முதலிய கொடிய விலங்குகளால் துயர்நேராது காத்தல், கள்வர் முதலியோரால் அவை கவர்ந்துகொள்ளாதிருக்கவும் ஆயர்கள் வீரமறவர்களாகவும் இருத்தல் இன்றியமையாத தாயிருந்தது. இத்காரணித்தினாலேயே ஆயர்கள்*

*தம்மகளிரை மணக்க வரும் ஆயர்களின் வீரத்தையும் வலிமையையும் அறிந்தே மகட்கொடை நேரும் வழக்கத்தையும் உடையவராக இருந்தனர்.*

*முற்காலத்தில் மாட்டின் கழுத்தில் புளியம் விளாறை சுற்றியிருப்பார்கள். இதை சல்லி என்பார்கள். பிற்காலத்தில் மாட்டின் கொம்புகளில் பரிசுக்காகக் காசுகளைக் கட்டியிருப்பார்கள். இதை ஜல்லி என்பார்கள். கொம்புகளில் கட்டிய பரிசுப்பணத்தை வைத்தோ, கழுத்தில் கட்டிய மணிகளை வைத்தோ சல்லிக்கட்டு அல்லது ஜல்லிக்கட்டு என பின்னாளில் பெயர் பெற்றிருக்கலாம்.*

**திருவிழா**

*பொங்கல் விழாவானது உழும் நிலத்திற்கும், உழுவ உதவும் மாடுகளுக்கும் நன்றி செலுத்தும் விதமாகக் கொண்டாடப்படுகிறது. பின்னாளில் பொங்கல்விழாவை ஒட்டி நடத்தப்படும் விளையாட்டாக ஏறுதழுவுதல் மாற்றப் பட்டுவிட்டது.*

**கோலும் குடியும்**

*கோல் என்ற சொல்லிற்கு*

***"தடி, ஆட்சி, அம்பு, யாழின் நரம்பு"***

*என தமிழ்விக்சனரியும்*

***"மரக்கொம்பு, ஊன்றுகோல், செங்கோல், தீக்கடைக்கோல், பிரம்பு, யாழ்நரம்பு, அரசாட்சி"***

*என தமிழ் அகராதியும் பொருள் தருகின்றன.*

***"பருவம் செய்த பானாள் கங்குல்***
***ஆடுதலைத் துருவின் தோடு ஏமார்ப்பக்***
***கடைகோல் சிறுதீ அடைய மாட்டித்***
***திண்கால் உறியன் பானையன் அதளன்"***

***(அகநானூறு. 274)***

*பருவம் மழை பெய்கிறது. நள்ளிரவில் ஆட்டுமந்தை அஞ்சாமல் உறங்குவதற்காக ஆயன் காவல் காக்கின்றான். தீக்கடைக் கோலால் தீப் பற்றவைத்து அதன் ஒளியால் கொடிய விலங்குகள் அணுகாதபடி காவல் புரிகிறான். உறியும் பானையும் தோலும் அவனைச் சூழ்ந்திருக்கின்றன. நுண்ணிய மழைத்திவலை பல அவனை ஒருபக்கம் நனைக்கின்றன. கோலைத் தன் காலுடன் சேர்த்து ஊன்றித் தனியே நிற்கிறான். அடிக்கடி இதழை மடித்துவிட்டு வீளைஒலி எழுப்புகிறான். மந்தையில் துள்ளியாடும் குட்டிகளைக் கவர்வதற்காக அங்குவந்து வாய்ப்புப் பார்த்திருக்கும் குள்ளநரி அந்த ஒலியைக்கேட்டு அஞ்சி முள்புதரில் ஓடி ஒளிகிறது என கோலுக்கும் ஆயருக்குமான உறவை விளக்குகின்றது அகநானூறு.*

*வளைந்த கோலைக் கையில் ஏந்திய கோவலர்கள் காளைகளோடு உள்ள பசுக்களை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தி மேட்டு நிலத்தில் விடுகிறார்கள் என்ற செய்தியை,*

***"ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்***
***ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்"***

***(நெடுநல்.3 - 4)***

*என்றும், செருப்பு அணிந்ததால் ஆகிய வடு அவனுடைய வன்மையான அடிகளில் காணப் படுகின்றது, சிறந்த தடியைப் பற்றி ஊன்றிப் பழகிய கைகளில் மழு பிடித்து ஏந்தி வெட்டியத் தழும்பும் இருந்தது என்றும் நெடுநல்வாடை கோவலரின் கோல் குறித்துச் சுட்டுகின்றது.*

*பொதுவாக, ஆயர்கள் பெரிய கோடல்புவைச் சூடிக்கொண்டு இரு தலையாய்ப் பிரிந்த கோல் உடையவர்களாய் பகற்பொழுதில் பெய்த மழையினால் துன்புற்ற பசுக்கூட்டத்தோடு ஊரை நோக்கித் திரும்புவார்கள். இரவில் ஆட்டுக்குட்டிளைச் சேரத் தொகுத்துள்ள ஓரைப்பாயை முதுகில் சுமந்திருப்பர். மிக்க இருளில் கொள்ளியின் தீயில் அகங்கை காய்ந்திடக் குறுநரிகளை நீண்ட ஒலி எழுப்பி ஒட்டுவர். இதனை,*

***"வண்டுபடத் தொடுத்த நீர்வார் கண்ணியன்***
***ஐதுபடு கொள்ளி அங்கை காயக்"***

***(அகம்.94:6-7)***

*என்று ஆயர்களின் கோலினது முக்கியத்துவத்தை அகநானூறு விளக்குகின்றது. இவ்வாறெல்லாம் உறுதுணையாக இருந்த கோலானது ஆயர்கள் நாகரிக வளர்ச்சியடையும் போது அவர்களுடனேயே வளர்ச்சி அயடைந்தள்ளது.*

*இசையை அனைத்து உயிரினங்களாலும் உணரமுடியும். இசை என்னும் விதை முளைத்தது*

முல்லை நிலத்திலாகும். இந்த இசைக்கு மூலம் இசைக்கருவி. இசைக் கருவியில் முதற் கருவி குழல். அதற்கு வடிவமும் உயிரும் தந்தவன் முல்லை நிலத்து ஆயன். குழல் வழியே தான் யாழ் எனும் இசைக்கருவியும் எழுந்தது. ஆதலால் பண்ணும் பாடலும் தோன்றி வளர்ந்த இடம் முல்லைநிலமே என்பதில் ஐயமில்லை. இதனைப் பத்துப்பாட்டில் ஒன்றான பெரும் பாணாற்றுப் படையில் ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் முல்லைநில ஆயர் எவ்வாறு குழலும் யாழும் அமைத்து அவற்றில் இனிய பண்களை ஏற்றி இசைத்தனர் என்று அழகாக விளக்குகின்றார்.

***"கன்றமர் நிரையொடு கானத்து அல்கி***
***அந்நுண் அவிர்புகை கமழக் கைம்முயன்று***
***ஞெலிகோல் கொண்ட பெருவிறல் ஞெகிழிச்***
***செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்***
***இன்தீம் பாலை முனையின் குமிழின்***
***புழற்கோட்டுத் தொடுத்த மரபுரி நரம்பின்***
***வில்யாழ் இசைத்தம் விரலெறி குறிஞ்சி"***

***(பெரும்பாண்.176 - 180)***

என்னும் அடிகளில் கையால் முயன்று தீக்கடைக் கோல் கொண்டு சிறுபுகை பமழும்படியாகச் செய்து தீப்பற்ற வைத்த கொள்ளிக் கட்டையின் நெருப்பால் கருநிறமான துளைகளை உண்டாக்கிக் குழல் செய்து கொண்டு இசை எழுப்புகின்றான் ஓர் ஆயன், அதனினூடே இனிய பாலைப் பண்ணை இசைக்கிறான், பின்பு குமிழ மரத்தின் கொம்பை வளைத்து மரல் என்று சொல்லப்படும் பெருங்குரும்பையின் நாரை முறுக்கி நரம்பாக்கிக் கட்டி வில்யாழ் செய்து கொள்வான். அவ்யாழை இசைக்கும் போது வருகின்ற இசை இமிரின் இசையை ஒத்துள்ளது என்றும் கூறுகின்றது பெரும் பாணாற்றுப்படை. "இந்த மேற்கோளைக் காட்டி யாழ்நூல் இயற்றிய விபுலானந்த அடிகளாரும் முல்லை நிலத்தவரே இசைக் கருவிகளின் மூலத்தர் என்று குறிப்பிட்டுள்ளார்" என வி.சி. சசிவல்லி சுட்டுகின்றார். (ப.19, முல்லை)

குழலின் வளைவான இடத்தில் முல்லைக் கொடியை முப்புரியாகத் திரட்டி வளைவாக செய்து செறிப்பர். இது முல்லைக்குழல் என்று அழைக்கப்பட்டது.

***"முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ"***

***(சிலம்பு. 17:21)***

என்று சிலப்பதிகாரம் இசைக்கின்றது.

"இசைத்துறையில் அடித்தளம் அமைத்தவற்றில் ஒன்று. இதனையே செவ்வழியாழ் என்பர் பண்ணைத் தெரிக்கும் யாழ் நால்வகைப்படும். அவற்றுள் ஒன்று முல்லையாழ். அது வழங்கும் பண், நோதிறம், பெயர்திறம், சாதாரி முல்லையென நாலும் செவ்வழி நல்யாழ் திறனே" (பிங்கல நிகண்டு. 1379)

குழல்வழி எழுந்த யாழிலும் முல்லையாழ் உண்டு என பிங்கலநிகண்டு விளக்குகின்றது. கோலின் அடுத்த பரிணாம வளர்ச்சியை இம்மேற் கோள்கள் தெளிவுறுத்துகின்றன.

### அதிகாரமும் அரசும்

காதல் மணம் என்ற இயற்கை மணமுறை முல்லை நிலத்தில் சிறிது சிறிதாக மாறி பெற்றோரால் உறுதி செய்யப்பட்ட மணம் வழக்கமானது. அதாவது களவும் கற்பும் நிறைந்த இல்வாழ்க்கை என்ற காதல் மணம் குறைந்து கற்பு மணத்தின் தொடக்கம் முல்லை நிலத்தில் உருவாகின்றது. ஏறு தழுவுபவரை மணத்தல் என்பது பின்னாளில் தனது ஏறினைத் தழுபவரை மணத்தல் என்று கற்பு மணத்திற்கு வழிவகுத்துக் கொடுத்துள்ளது.

***"முல்லை சான்ற கற்பின் மெல்லியல்"***

***(சிறுபாண்.30)***

***"முல்லை சான்ற கற்பின் குறுமகள்" (நற்.142)***

இவ்வாறு பல்வேறு இலக்கியங்கள் ஒரே வகை தொடரால் முல்லையொடு கற்பை இணைத்துப் பாடியுள்ளதைக் காணலாம். இவற்றால் எந்த அளவிற்கு முல்லைமலர் கற்பின் அடையாளமாகப் போற்றப்பட்டு வந்தது என்பதை அறியலாம். ஆடு, மாடுகள் செல்வம் என்பதால் தனித்தனி இனக்குழு சமுதாய குடும்பமுறையும், தனிநபர் சொத்துரிமையும் உருவாயின. ஏராளமான ஆடு, மாடுகளை உடைய தலைவனின் செல்வம் காரணமாக தந்தைவழி சமுதாயம் உருவாகி, அதிகாரத்தையும் அளித்தது. "பின்னர்

அவர்களுடைய உடைமையைக் காக்க வாரிசுரிமை தேவைப்பட்டது. இந்த வாரிசுரிமையை நிலை நாட்ட ஒருவனுக்கு ஒருத்தி என்ற உறவை மேற்கொண்டு வாழ வேண்டும் என்ற எண்ணமும், அதில் தவறேதும் நிகழாமல் தடுத்துக்காக்கக் கற்பு என்ற ஒழுக்கமும் உருவாயிற்று. முல்லை நிலத்தில் நாடறி நன்மணம் புரியும் பழக்கம் ஏற்பட்டது'' என முல்லை நூல் (ப.44) எடுத்துரைக்கின்றது.

இனக்குழு தலைவன் நாளடைவில் சிற்றரசன் ஆனான். பின்னர் முடியுடை மூவேந்தர்களுக்குத் துணையாய் முல்லை நிலச் சீறூர் மன்னன் வாழத்தொடங்கினான். புறத்திணை முல்லைப் பாடல்களும் அகத்திணை முல்லைப் பாடல்களும் முல்லைநிலத் தலைவர்கள் வேந்தர்களுக்குத் துணையாயிருந்து உதவியமையைக் குறிப்பிடுகின்றன.

முல்லை நிலத்தில் பசுக்களை மேய்ப்பதற்கு உதவும் கருவியாக விளங்கிய கோல், மக்களினத்தின் தலைவனுடைய ஆட்சிக்குக் குறியீடாக அமைந்து அவன் ஏந்திய கோல் அவனுடைய குடிமக்கள் வணங்கும் கோலாக நின்றது. அவன் நல்ல முறையில் நேர்மையாக ஆளும் காலத்தில் அந்தக் கோல் செங்கோல் எனப் புகழப்பட்டது. அவன் நெறிமுறை தவறி ஆளும் காலத்தில் அதுவே கொடுங்கோல் எனவும் வழங்கப்பட்டது. இனக்குழு தலைவனான கோன் என்ற சொல்லால் அழைக்கப்பட்ட இடையன் அரசனான பின்பும் அதே சொல்லால் போற்றப்படுகிறான். மருதநிலத்தில் பேரரசுகள் உருவாக்கம் பெற்ற நிலையில், முல்லை நிலத்தில் குறுநில அரசுகள் உருவாயின. ஆடு, மாடு, மேய்க்கப் பயன்பட்ட கோல் பின்னாளில் அரசனின் ''செங்கோல்'' ஆயிற்று. வேள்பாரி அதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். வேள்பாரியினுள் இனக்குழு தலைவனையும், குறுநில மன்னனையும் மாறிமாறிக் காண முடியும். ஆநிரையைச் செல்வமெனப் போற்றும் முல்லை நில சிற்றரசர்களிடையே ஏற்பட்ட சிறுசிறு போர்களே அதாவது வெட்சி, கரந்தை போன்றவைகளே தொடக்ககாலப் போர்களாக விளங்கியிருக்கலாம்.

**கோலும் பயனும்**

ஆயர்களின் வாழ்வின் நீங்கா இடம் பெற்ற கோல் பின்னாளில் ஆட்சிக் குறியதாக மாறியது. சிலப்பதிகாரத்தில் மாதவி நடனமாடும் முன் மூங்கில் கோலை வைத்து ஆடியுள்ளாள். அதன்பின் தேவை குறைந்து போன கோலானது பிற்காலத்தில் பெருந்தேவையை நிறைவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் உலகப்போரின் முடிவில் ஜப்பானிய மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளில் மிக முக்கியமான ஒன்று கண்பார்வையை இழந்தது. ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களின் பார்வையை சரி செய்ய முடியாத நிலையில் இதற்கு தீர்வு யோசித்த போது அவர்களுக்கு வெள்ளைப்பிரம்பு கைத்தடி சிந்தனை உதயமானது. சாதாரண கைத்தடி என்பது வயதானவர்கள், உடல் நலமில்லாதவர்கள் அதைத் தரையில் ஊன்றி கைத்தடியின் பலத்தில் நடப்பதாகும். ஆனால் வெள்ளைப்பிரம்பு கைத்தடி என்பது சற்றே வளையும் தன்மை கொண்டிருப்பதாலும், சற்றே நீண்டு இருப்பதாலும் செல்லும் வழிகளில் இப்பிரம்பினை ஊன்றி தரையின் தன்மையை அறிந்து பாதுகாப்பாக யாருடைய உதவியும் இன்றி நடந்து செல்வர். பார்வைத் திறன் பாதித்தோர் வெளியில் சென்றுவர உருவாக்கப்பட்ட ஒரு அருமையான வழித்துணை தான் வெள்ளைப் பிரம்பு. இது மனதிற்கு புத்துணர்ச்சி தருவதாகவும் விளங்ககின்றது.

வெள்ளைப்பிரம்பு உருவாகிய நிகழ்வை, ஆண்டு தோறும் அக்டோபர் மாதம் பதினைந்தாம் தேதி உலக அளவில் ''வெள்ளைப்பிரம்பு நாள்'' என்று கொண்டாடி வருகின்றனர். பார்வைத்திறன் பாதித்தவர்களை நாங்கள் உங்களுக்குத் துணையாக இருக்கின்றோம் என்று ஊக்கப்படுத்தவே இவ்விழா நடத்தப்பட்டது.

அடியாத மாடு படியாது என்னும் பழமையான மொழிக்கு ஏற்ப பிற்காலத்தில் கோல் ஆயர்களின் கைகளைக் காட்டிலும் ஆசானின் கையில் அதிகமாகக் காணப்பட்டது.

**''அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற''**

**(குறுந்தொகை. 364)**

பின்னிக்கிடக்கும் பிரம்புக்கொடி என ஔவையாரின் பாடல் பிரம்பின் கோல்

குறித்துச் சுட்டும். நெகிழும் தன்மையுடைய இப்பிரம்புக்கோலில் அடி அவ்வளவு வலிக்காது. பிற்காலத்தில் வலிமையான நொச்சிக் குச்சியின் வரவு அதிகரித்துவிட்டது. 2021 ஆம் ஆண்டில் அமேசானில் ''குழந்தைகளை அடிப்பதற்கான பிரம்பு'' என்கின்ற பெயரில் பிரம்புக்குச்சிகள் விற்பனையானது குறிப்பிடத்தக்கது. இன்றைய காலத்தில் கோலின் நேரடித்தேவை சற்றே குறுகியுள்ளது எனலாம். இருப்பினும் காவலர்களின் கைகளில் தீராது விளையாடுகின்றது இக்கோல்.

## முடிவுரை

ஆயர்களின் வாழ்வோடு ஒன்றிப்போன கோலானது, இசைக்கருவியாக பரிணாம வளர்ச்சியடைந்து, பின்னாளில் செங்கோலாக பொருள் மாற்றம் பெற்று, ஆசானின் கைகளில் இறுகிப்போய், இன்று, இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து விட்டது. முல்லை நில மக்களின் கோல் குறித்த பண்பாட்டை இக்கட்டுரை பேசினாலும் அதன்பின்னுள்ள மாற்றங்களையும் சுட்ட வேண்டிய தேவையுமுள்ளது. கோல் சிறிதுசிறிதாக மாற்றத்தை அடைய அடைய பெண்ணும் தன்னிலையிலிருந்து மாற்றமடைந்து கொண்டே வந்துள்ளாள். மடலேறுதல் என்னும் நிகழ்வின் பின்னும், களவு நிலையிலிருந்து கற்பு நிலை என மாற்றத்தைக் கொடுத்த ஏறுதழுவுதலின் உள்ளும், செங்கோல் ஆட்சி, கொடுங்கொல் ஆட்சி என அனைத்திலுமே சுதந்திரம் குறைக்கப்பட்டு, பெண்ணைப் பொருளாக மாற்றம் பெறச் செய்தலுக்கான ஏற்பாடுகள் நடந்துள்ளன என்பதை இக்கட்டுரை வழி உணரமுடிகின்றது.

சங்ககால முல்லை நிலத்தின் வழி வெளிப்பட்டு, அரசனின் ஆட்சியில் சிறப்பு பெற்று, மறுபுறம் இசைக்கருவியாய் பரிணமித்து, பிற்காலத்தில் ஆசானின் கைகளிலும் காவலர்களின் கைப்பிடியிலும் நின்று இன்னும் ஏதோர்வகையில் மக்களுக்கு வழிகாட்டியாய் திகழ்ந்து வருகின்றது இச்சிறப்பு பொருந்திய கோல்.

## துணைநூற் பட்டியல்

1. அகநானூறு, ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உரையாசிரியர்), சாரதா பதிப்பகம், சென்னை - 40.
2. குறுந்தொகை, மு. சண்முகம்பிள்ளை, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவுர், 1985.
3. சிலப்பதிகாரம், கிழக்கு பதிப்பகம், சென்னை, 2010
4. சிறுபாணாற்றுப்படை, கழகவெளியீடு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969
5. திருக்குறள், புலவர் வீ. சிவஞானம், விஜயா பதிப்பகம், டவுன்ஹால், கோயம்புத்தூர், 2012
6. நற்றிணைச் சொற்பொழிவுகள், கழக வெளியீடு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1957
7. நெடுநல்வாடை, கழகவெளியீடு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1970.
8. பிங்கலநிகண்டு, வசந்தா பதிப்பகம், சென்னை, 2000
9. பெரும்பாணாற்றுப்படை, கழகவெளியீடு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969.
10. முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, சாரதா பதிப்பகம், சென்னை, 1962.
11. முனைவர் சசிவல்லி வி.சி., முல்லை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை -13.